සියලු ම හිමිකම් ඇවිරිණි]
[முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**29 T I**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2010 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2010 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2010

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I
தொடர்பாடல், ஊடகக்கற்கை I
**Communication and Media Studies I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**கவனிக்க :**
* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை எழுதுக.**
* விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்க.
* 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (X) இடுவதன் மூலம் காட்டுக.

1. மகேசும் சுரேசும் இனிய நண்பர்கள் ஆவார்கள். ஆனாலும் ஒருவருக்கொருவர் அவர்களை ஏமாற்றுவதற்காகச் சில உபாயங்களைக் கையாண்டார்கள். அத்தகைய சந்தர்ப்பத்தில் காணக்கூடியது
   (1) ஆளிடைத் தொடர்பாடல் (2) குழுத் (கூட்டுத்) தொடர்பாடல்
   (3) அகமுகித் தொடர்பாடல் (4) வாய்மொழியற்ற தொடர்பாடல்
   (5) முறைசாராத் தொடர்பாடல்

2. "தொடர்பாடல் செயற்பாடு ஒரு இடத்திலிருந்து ஆரம்பித்து இன்னோர் இடத்தில் நிறைவேறுகிறது என நினைப்பது பிழையாகும்."
   மேற்கூறிய கூற்றினைச் சிறப்பாகக் காட்சிப்படுத்தும் தொடர்பாடல் மாதிரி
   (1) ஹரல்டி லாஸ் வெல் மாதிரி (2) ஷெனோன் வீவர் மாதிரி
   (3) வில்பர் ஸ்ராம் மாதிரி (4) டேவிட் கே. பர்லோ மாதிரி
   (5) அரிஸ்டோட்டில் மாதிரி

3. ஒரு மேடை நாடகத்தில் அதிகமாகக் காணக்கூடியதாக இருப்பது
   (1) முறைசார்ந்த, வாய்மொழி, செவிப்புல, கட்புலத் தொடர்பாடலாகும்.
   (2) வாய்மொழி, வாய்மொழியற்ற, செவிப்புல, கட்புலத் தொடர்பாடலாகும்.
   (3) செவிப்புல, வாய்மொழி, முறைசாரா, கட்புலத் தொடர்பாடலாகும்.
   (4) வாய்மொழி, வாய்மொழியற்ற, முறைசாரா, எழுத்துத் தொடர்பாடலாகும்.
   (5) கட்புல, எழுத்து, முறைசார்ந்த, முறைசாராத் தொடர்பாடலாகும்.

4. ஒரு நபரிடம் உருவாகும் கருத்துகள் சிந்தனைகள் ஆகியவற்றைக் குறியீடுகள் மூலம் செய்தியாக மாற்றும் செயன்முறை
   (1) குறிமுறையாக்குதல் (encoding) (2) குறியவிழ்த்தல் (decoding)
   (3) சுய வெளிப்பாடு (4) குறியாக்கம்
   (5) சுய எண்ணக்கரு

5. தொடர்பாடலியலாளருக்கும் பெறுநருக்குமிடையில் இருக்கும் ஒத்ததன்மை பற்றி மிகவும் நன்றாக விவரிப்பது
   (1) வில்பர் ஸ்ராம் இன் மாதிரி (2) ஹரல். டி. லாஸ்வெல் மாதிரி
   (3) ஷெனோன் வீவர் மாதிரி (4) ஸ்ராம் ஒஸ்குட் மாதிரி
   (5) டேவிட். கே. பர்லோ மாதிரி

6. இலத்திரனியற் தொடர்பாடற் செயற்பாட்டில் தடையாக **அமையாதது**
   (1) ஆகாயவிமானம் மிக உயரமாகப் பறத்தல்
   (2) சூழலில் உயர் வெப்பநிலையும் ஈரப்பதனும் இருத்தல்
   (3) பெறுநர் நோய்வாய்ப்பட்டிருத்தல்
   (4) ஊடகம் பற்றி அறியாதிருத்தல்
   (5) மூடுகை வீச்சினுள் (coverage) இருத்தல்

[பக். 2 ஐப் பார்க்க

7. ஆளிடைத் தொடர்பாடல் என்பது நாளாந்த வாழ்க்கைக்கு அத்தியாவசியமான தொடர்பாடல் சந்தர்ப்பமாகும். குழுத் தொடர்பாடலுடன் ஒப்பிடும்போது அதிலுள்ள முனைப்பான இயல்பு
   (1) தொடர்பாடலியலாளர் மொழியைப் பயன்படுத்தல்
   (2) பெறுநர் நன்றாக செவிமடுத்தல்
   (3) தொடர்பாடலியளாளரினதும் பெறுநரினதும் வகிபாகங்கள் நிரந்தரமாக இருத்தல்
   (4) வாய்மொழியற்ற தொடர்பாடல் வலுவுள்ளதாக இருத்தல்
   (5) ஒரு நபர் மாத்திரம் இருத்தல்

8. வெகுஜன ஊடகங்களின் இயல்புக்கிணங்க சில சந்தர்ப்பங்களில் மொழியின் மிக இலகுவான சுருக்கப் பதங்களைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். இந்நிலைமை பெரும்பாலும் காணப்படுவது
   (1) பத்திரிகை ஊடகத்தில்
   (2) வானொலி ஊடகத்தில்
   (3) தொலைக்காட்சி ஊடகத்தில்
   (4) சினிமா ஊடகத்தில்
   (5) புதிய ஊடகத்தில்

9. காகமும் வடையும் பற்றிய கதையை வகுப்பறையில் கற்பித்த ஆசிரியர், கதையில் உங்களை மிகவும் கவர்ந்த ஒரு சந்தர்ப்பத்தைச் சித்திரமாக வரையும்படி மாணவர்களுக்குக் கூறினார். மாணவர்களிடமிருந்து ஆசிரியர் எதிர்பார்க்கக்கூடியது
   (1) ஓவியம் பற்றிய திறனை அளத்தல்
   (2) படைப்புத் தொடர்பாடல் திறன்களை இனங்காணுதல்
   (3) யாதாயினும் ஒன்றை நிச்சயமாக இனங்காணும் ஆற்றலை அறிந்துகொள்ளல்
   (4) கலை தொடர்பாக உள்ள விளக்கத்தை அவதானித்தல்
   (5) நாட்டார் கதை பற்றிய விளக்கத்தை இனங்காணல்

10. பல்வேறு தொடர்பாடல் சந்தர்ப்பங்களில் பின்னூட்டல் இடம்பெறும். அத்தகைய சந்தர்ப்பங்கள் தொடர்பாக வெகுசன ஊடகத்தில் பின்னூட்டல் நிகழ்வது
   (1) பெரும்பாலும் உடனடியான வடிவத்தில்
   (2) எல்லைப்படுத்தப்பட்ட, தாமதமான வடிவத்தில்
   (3) எல்லைப்படுத்தப்பட்ட, உடனடியான வடிவத்தில்
   (4) அதிகளவில் எல்லைப்படுத்தப்பட்ட, பொதுவாகத் தாமதமான வடிவத்தில்
   (5) அதிகளவில் பொதுவாக உடனடியான வடிவத்தில்

11. பத்திரிகை ஒன்றின் துணை ஆசிரியருக்கு கிடைத்த ஒரு கட்டுரையில் பின்வரும் வாக்கியங்கள் உள்ளடக்கப் பட்டிருந்தன. அவற்றுள் திருத்தம் செய்யத் **தேவையற்ற** வாக்கியம் எது ?
   (1) நீங்கள் பணம் தந்தால்லாமல் நான் இங்கிருந்து போவேன்.
   (2) நீயும் நானும் அவனும் தோற்றத்தில் ஒத்திருக்கின்றோம்.
   (3) விபத்தினால் மூன்று பேர் கொல்லப்பட்டனர்.
   (4) பேரிடர்கள் வருவதையிட்டு எல்லோருக்கும் குழப்பம் அடைந்தனர்.
   (5) காட்டில் பறவைகள் கூட்டம் கூட்டமாக வசிக்கின்றது.

12. கிளைமொழி (dialect) பற்றி அறிமுகஞ் செய்வதில் **பொருத்தமற்ற** விடயத்தைத் தெரிவு செய்க
   (1) பிரதான மொழியினுள் துணைமொழி இருத்தல்
   (2) உபகலாசார இயல்புகளைக் கொண்டிருத்தல்
   (3) பிரதேசமொழிகளின் இயல்புகளைக் கொண்டிருத்தல்
   (4) ஆதார மொழி இயல்புகளைக் கொண்டிருத்தல்
   (5) குறுகிய குழுக்களுக்கிடையில் பயன்படுத்தல்

13. தொடர்பாடல் செயன்முறைக்கு மானிட வாழ்க்கை பரம்பரையாக இசைவாக்கமடைந்திருத்தல்
   (1) கீழைத்தேயப் பண்பாட்டில்
   (2) மேலைத்தேயப் பண்பாட்டில்
   (3) புராதன பண்பாட்டில்
   (4) உலகளாவிய பண்பாட்டில்
   (5) மத்திய ஐரோப்பியப் பண்பாட்டில்

14. 'அபிவிருத்தித் தொடர்பாடல்' செயற்றிட்டத்தில் தகவல்களை/ தரவுகளைச் சேகரிப்பதற்கு பயன்படுத்தும் முறைகள் யாவையென ஆசிரியர் கேட்ட கேள்விக்குக் கிடைக்கப்பெற்ற சில பதில்கள் பின்வருமாறு
   A - நேர்முக உரையாடல்
   B - ஆய்வு செய்தல்
   C - அவதானித்தல்
   D - மாதிரி தயாரித்தல்
   E - துறைச்சொற்கோவை (terminology)

   மேற்குறித்தவற்றுள்
   (1) A, B, C ஆகியன உண்மையாக இருக்கும் அதே வேளை D, E ஆகியன பொய்யானவை.
   (2) A, B ஆகியன உண்மையாக இருக்கும் அதே வேளை C, D, E ஆகியன பொய்யானவை.
   (3) B, C, D ஆகியன உண்மையாக இருக்கும் அதே வேளை A, E ஆகியன பொய்யானவை.
   (4) C, E ஆகியன உண்மையாக இருக்கும் அதே வேளை A, B, D ஆகியன பொய்யானவை.
   (5) A, B, C, D, E ஆகிய எல்லாம் உண்மையானவை.

[பக். 3 ஐப் பார்க்க

15. நேற்று நடைபெற்ற மிக மோசமான வாகன விபத்து பற்றிய முக்கியமான தகவல்கள் இன்று பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. இது
   (1) காலத்திற்கேற்ப செய்தி அறிக்கையிடுதலாகும்.
   (2) ஆய்வுச் செய்தி அறிக்கையிடுதலாகும்.
   (3) பிரதேச செய்தி அறிக்கையிடுதலாகும்.
   (4) சுவையான செய்தி அறிக்கையிடுதலாகும்.
   (5) கடுமையான செய்தி அறிக்கையிடுதலாகும்.

16. கிராமிய அபிவிருத்தி திட்டத்திற்குரிய செய்திகளைத் தயாரிக்கும்போது பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமெனத் தொடர்பாடலியலாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அவ்வாறான முடிபுக்கு வருதல் சாத்தியமாக இருப்பது
   (1) பாரம்பரிய நூல்களின் உரிமைகள் சிக்கல் இல்லாமல் இருப்பதனால்
   (2) பாரம்பரியம் மக்களின் மெய்யறிவுக்கு நெருங்கி இருப்பதனால்
   (3) பாரம்பரியம் என்பது கிராமிய அடிப்படையுள்ள ஆக்கமாக இருப்பதனால்
   (4) பாரம்பரியத்திற்கும் அபிவிருத்திற்கும் இடையில் தொடர்பு இருப்பதனால்
   (5) பாரம்பரியம் ஆக்கபூர்வமான தொடர்பாடற் தந்திரமாக இருப்பதனால்

17. ''நான் உனது எண்ணத்தை நிச்சயமாக எதிர்க்கிறேன். ஆனால் நீ அந்த எண்ணத்தில் கொண்டிருப்பதற்கான உரிமைக்காக நான் உண்மையாக முன்வருவேன்'' இக்கூற்றில் வெளிப்படுவது
   (1) ஐக்கியத்தின் தேவை
   (2) சகோதரத்தின் பெறுமதி
   (3) கருத்து வேறுபாட்டின் முக்கியத்துவம்
   (4) ஆழ்பரிவு (empathy)
   (5) நியாயமான உரிமை

18. ஆன்மீக கலாசாரத்தில் **இடம்பெறாதது**
   (1) சமயம்
   (2) புரான இலக்கியம்
   (3) அரசியல்
   (4) கலை
   (5) தத்துவம்

19. வெகுசனத் தொடர்பாடல் செயன் முறையில் பல காவல்காரர்கள் உள்ளனர் எனக் கூறப்படுகின்றது. நீங்கள் அவ்வாறான காவல்காரன் என்றால் உங்களது செயற்பாட்டில் இறுதிப் பலன் என்பது
   (1) வெகுசன ஊடகங்களுக்கிடையிலுள்ள போட்டியைக் கட்டுப்படுத்தல்
   (2) வெகுசன ஊடகங்களில் இருக்கும் சமநிலையைக் கட்டுப்படுத்தல்
   (3) வெகுசன ஊடகங்கள் ஊடாகச் செய்திகள் செல்வதைக் கட்டுப்படுத்தல்
   (4) வெகுசன ஊடகங்களுக்குள்ள உள்ளடக்கத்தின் பிழையற்ற நிலையைக் கட்டுப்படுத்தல்
   (5) வெகுசன ஊடகங்களில் ஏற்படும் பாதகமான விளைவுகளைக் கட்டுப்படுத்தல்

20. தொடர்பாடலைப் பற்றிய சரியான வரைவிலக்கணம் யாது ?
   (1) தகவல்களின் இணைப்பாகும்.
   (2) தகவல்களை அனுப்பும், பெற்றுக்கொள்ளும் செயன்முறையாகும்.
   (3) வெகுசனத் தொடர்பாடலினதும் வெகுசனத் தகவல்களினதும் ஊடகமாகும்.
   (4) பல்வேறு வாங்கி மற்றும் ஊடுகடத்தும் உபகரணங்களினதும் பின்னிய செயற்பாடாகும்.
   (5) செய்முறை சார்ந்த இடைத்தாக்கச் செயன்முறையாகும்.

21. தகவல்கள் உள்ள சமூகத்தில் வாழும் நபர் நிரந்தரமாக வெகுசன ஊடகங்கள் ஊடாகப் பிரசுரிக்கப்படும் பல்வேறு செய்திகளுக்கு முகங்கொடுப்பார். அச்செய்தியினை நன்றாக விளங்கிக் கொள்வதற்கும் வரைவிலக்கணப் படுத்துவதற்கும் உதவும் ஆற்றல்
   (1) ஊடக மீள்வார்ப்பு (stereotyping)
   (2) ஊடகப் பகுப்பாய்வு
   (3) ஊடக எழுத்தறிவு
   (4) ஊடக விமர்சனம்
   (5) ஊடக புலக்காட்சி

22. பிரபல்யமான கலாசாரம் பற்றிய பகுப்பாய்வில் பிரதானமாகக் கவனஞ் **செலுத்தப்படாதது**
   (1) கலாசார ஆக்கத் துறை
   (2) அளவறி துறை
   (3) மேலாதிக்க எண்ணக்கருத் துறை
   (4) பொதுமக்கள் பண்பாட்டுத் துறை
   (5) அழகியல் துறை

23. ஹரோல்ட் டீ. லாஸ்வெல் இன் தொடர்பாடல் மாதிரி
   A - வட்டச்சுற்று பாய்ச்சலைக் கொண்டது.
   B - செயல் விளைவு பற்றி அதிக கவனத்தைச் செலுத்துகின்றது.
   C - பெறுநரிடம் குறைந்த கவனத்தைச் செலுத்துகின்றது.
   D - தொடர்பாடல் முறையின் நான்கு பிரதான மூலத்துவங்களை அடிப்படையாகக் கொண்டது.
   மேற்குறித்த கூற்றுகளில்
   (1) A, B ஆகியன மாத்திரம் உண்மையானவை.
   (2) B, C ஆகியன மாத்திரம் உண்மையானவை.
   (3) C, D ஆகியன மாத்திரம் உண்மையானவை.
   (4) A, B, C, D ஆகிய எல்லாம் உண்மையானவை.
   (5) A, B, C, D ஆகிய எல்லாம் பொய்யானவை.

[பக். 4 ஐப் பார்க்க

24. புதிய தாராண்மை வாதத்தில் விவரிக்க **உகந்ததல்லாதது** எது ?
 (1) ஊடகக் கலாசாரத்தில் பிரதான பாத்திரமாக உடையது.
 (2) மேற்கு ஐரோப்பிய வர்த்தக சமுதாயத்தில் ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டது.
 (3) உலகமயமாக்கலுடன் மோதல்
 (4) தேசிய பொருளாதார சுதந்திரத்துடன் மோதல்
 (5) உலகமயமாக்கலின் பெறுபேற்றினால் ஆக்கப்பட்டது.

25. மொழி சுவீகரித்தல் (aquisition) என்பது
 (1) மொழியின் தனித்துவமான இயல்புகளை இனங்காணல்
 (2) மொழியிலுள்ள பதங்களுக்கு புதிய கருத்துகளை ஆக்கல்
 (3) மொழியைப் பயன்படுத்தவும் கிரகித்தலுக்கும் கற்றுக்கொள்ளல்
 (4) சொற்களின் கருத்துகளுக்கேற்ப மொழியின் பயன்பாடு வேறுபடுதல்
 (5) விதிமுறைக்கேற்ப ஒழுங்குமுறையில் சரியாக இனங்காணல்

26. நவீனமயப்படுத்தல் செயன்முறையில் சில மக்கள் கூட்டத்தினரின் கலாசார விழுமியங்களின் முக்கியத்துவத்தை கருத்திற்கொள்ள வேண்டியது
 (1) கலை ரூபமான முறையிலாகும்.
 (2) மக்களின் கலாசார இசைவாக்கத்தின் தோற்றத்திலாகும்.
 (3) பாரம்பரியங்களின் நற்காப்பிலாகும்.
 (4) சமூக கலாசாரப் படைப்பின் அடிப்படையிலாகும்.
 (5) புராண சார்பான சடங்கு முறைமைகளிலாகும்.

27. ‘அபிவிருத்தி’ பற்றி பொதுமையான வழிகள் இல்லை. ஒவ்வொரு நாடும் தமது நாட்டுக்கு உகந்த தந்திரோபாயங்களைக் கொண்டுள்ளன. இக்கூற்றுக்கு ஏற்ப அபிவிருத்தியடையும் நாடு ஒன்றின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் பயன்படுத்த **முடியாதது** எது ?
 (1) நவீனமயமாக்கல் (2) நகரமயமாக்கல்
 (3) கைத்தொழில் மயமாக்கல் (4) மேலைத்தேய நாகரிகமயமாக்கல்
 (5) ஆழ்பரிவு (empathy)

28. ‘பாடசாலைக் கற்றலில் பத்திரிகை ஊடகத்தைப் பயன்படுத்தல்’ என்னும் தொடர்பாடல் செயற்றிட்டத்தில் அறிக்கை ஒன்றினைத் தயாரிக்குமாறு தங்களுக்குப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ் அறிக்கையில் உள்ளடக்கத் **தேவையற்றது** எது ?
 (1) ஆராய்ச்சி முறையின் பயன்பாடு (2) பயன்படுத்திய மாதிரியெடுத்தல் முறை
 (3) ஆலோசனைகளும் முடிவுகளும் (4) அபிவிருத்தித் திட்டங்களின் பாகுபாடு
 (5) பயன்படுத்திய பௌதிக மனித வளங்கள்

29. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்கள் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் மொழி வகைகளின் சரியான தொடரொழுங்கினைக் கொண்டுள்ள விடையைத் தெரிவு செய்க
 A - தொடர்பாடல் செயன்முறையில் உரத்த தொனியில் உச்சரித்தல்
 B - சொந்த அபிப்பிராயத்துக்கேற்ப அதைப் பற்றிய கருத்துகளின் தேவை
 C - அமைப்பு சந்தம், வேகம் ஆகியவற்றின் விசேட இயல்புகளைக் கொண்டிருத்தல்
 (1) A - விளக்கம், B - எழுதுதல், C - பேசுதல்
 (2) A - பேசுதல், B - விளக்கம், C - கதை வசனம்
 (3) A - பேசுதல், B - பேச்சு, C - காண்பியவாக்கம் (visualization)
 (4) A - பேசுதல், B - விளக்கம், C - காண்பியவாக்கம்
 (5) A - காண்பியவாக்கம், B - பேச்சு, C - விளக்கம்

30. X என்னும் கம்பனி ஒன்றினால் உள்ளக சஞ்சிகை (In - house journal) ஒன்றினை வெளியிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இதன் பயன்பாடு பற்றி சபைப் பணிப்பாளர்களிடையே கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அங்கு எடுத்துரைக்கப்பட்ட கருத்துகளிடையே **உகந்தல்லாதது** எது ?
 (1) கம்பனியின் இலாபத்தையும் சொத்துகளையும் அதிகரிப்பதற்கு மேற்கொள்ளும் முறைகளை நியாயமான முறையில் மேற்கொள்ள வேண்டும்.
 (2) தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு, உற்பத்தித்திறன் நலனோம்பல் பற்றிய விடயங்களை விளக்க வேண்டும்.
 (3) கம்பனியின் நிர்வாக நோக்கு பற்றி தொழிலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.
 (4) கம்பனியின் உற்பத்திகள் பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.
 (5) தொழிலாளர்கள் பங்குதாரர்கள் முகவர்கள் நலன்விரும்பிகள் போன்றவர்களிடையே தகவல்கள் பரிமாற்றப்பட வேண்டும்.

31. நேற்றுமாலை கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வாண்மையியலாளரின் மகாநாடு ஒன்றில் வெகுசன ஊடக அமைச்சர் தனது சொற்பொழிவில் ஒவ்வொரு வாண்மையியலாளரினதும் தொழிற்கௌரவத்தின் (ethics) பாதுகாப்புக்கு விசேட கவனஞ் செலுத்தப்பட வேண்டும் என கூறினார்.
புதினப் பத்திரிகையில் மேற்குறித்த கூற்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. இக்கூற்று செய்திக் குறிப்பின்
 (1) ஒருபகுதியாகலாம். (2) தலையங்கமாகலாம்.
 (3) முற்பகுதியாகலாம். (4) முடிவுப்பகுதியாகலாம்.
 (5) சுருக்கமாகலாம்.

[பக். 5 ஐப் பார்க்க

32. நாடோடிக் கதை வல்லுனர் (folklore)களுக்கேற்ப நாட்டுக் கவிதைகளினூடாகச் சமூக, பொருளாதார, கலாசார அம்சங்களைக் கற்க முடியும். அதனைச் சிறப்பாக வெளிக்காட்டும் கற்கைத் துறை
(1) அரசியல் விஞ்ஞானம் (2) வரலாறு (3) உளவியல்
(4) மானுடவியல் (5) உயிரியல்

33. சமூக விஞ்ஞானத் துறையில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் சில பதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - நவீனமயப்படுத்தல் B - கைத்தொழில்மயமாக்கம் C - சமூக மாற்றம்
D - முன்னேற்றம் E - வளர்ச்சி
இவற்றுள் அபிவிருத்தி என்னும் பதத்துடன் ஒத்தகருத்துள்ள பதமாக இருக்கக்கூடியவை
(1) A, B, C, D ஆகியன மாத்திரம். (2) A, B, C, E ஆகியன மாத்திரம்.
(3) B, C, D, E ஆகியன மாத்திரம். (4) A, B, D, E ஆகியன மாத்திரம்.
(5) A, B, C, D, E ஆகிய எல்லாம்.

34. தொலைக்காட்சி மிகப் பிரபல்யம் வாய்ந்த ஊடகமாக சமூகத்தில் உள்ளதெனக் சந்தை அளவையீட்டு அறிக்கை குறிப்பிடுகின்றது. பின்வருவனவற்றுள் பிரபல்யம் பெறுவதற்கு முக்கியமாக அமைந்த நிகழ்ச்சிகளின் கூட்டத்தைத் தெரிவுசெய்க.
A - செய்திகள்
B - தொலைக்காட்சி நாடகங்கள்
C - யதார்த்த நிகழ்ச்சிகள்
D - இசை நிகழ்ச்சிகள்
E - சமய நிகழ்ச்சிகள்
F - சோதிட சாஸ்திர நிகழ்ச்சிகள்
G - சிறுவர் நிகழ்ச்சிகள்
(1) A, B, C, D (2) A, B, E, F (3) B, C, F, G
(4) B, C, D, E (5) C, D, F, G

35. பிரசைகளின் ஊடகம் (journalism) என்பது
(1) சமூகத்தில் உள்ள எல்லா அங்கத்தவர்களும் அரச நிர்வாகத்துக்குக் கட்டுப்படல்
(2) பிரசைகளின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல்
(3) சமூக ஒழுங்கமைப்புகளுடன் வேறு பிரசைகளின் குழுக்களும் ஒன்றிணைதல்
(4) எல்லாத் தேவைகளுக்காகவும் செயற்படுதல்
(5) ஓரளவு அரசார்புள்ள நிறுவனமாகச் செயற்படல்

36. தொலைக்காட்சியைப் பார்வையிடும் சில சிறுவர்களின் பேச்சு, பழக்கவழக்கங்கள் என்பன குறித்தளவு தூரத்திற்கு அவ் ஊடகத்தில் சந்திக்கும் பல்வேறு பாத்திரங்களில் இடம்பெறும் செயல்முறைகளைக் கொண்டுள்ளனவென ஆய்வு அறிக்கை காட்டுகிறது. இத்தகைய நிலைமை மிகச் சிறப்பாக பகுத்துக் காட்டுவது
(1) பொது அனுமான எண்ணக்கருவை (2) மாறா எண்ணக்கருவை (stereotyping)
(3) இருபடி எண்ணக்கருவை (4) சமூகப் பொறுப்புணர்வு எண்ணக்கருவை
(5) சமூகமயமாக்கல் (socialization) எண்ணக்கருவை

37. செவிமடுத்தல் செயன்முறை என்பது பயிற்சி மூலம் பெறத்தக்க ஒரு திறன் ஆகும். இதன் தொடராக இருக்கக்கூடியது
(1) செவிமடுத்தல், விளங்கிக்கொள்ளல், மதிப்பிடுதல், துலங்கல்
(2) விளங்கிக்கொள்ளல், செவிமடுத்தல், மதிப்பிடுதல், துலங்கல்
(3) செவிமடுத்தல், மதிப்பிடுதல், விளங்கிக்கொள்ளல், துலங்கல்
(4) விளங்கிக்கொள்ளல், செவிமடுத்தல், துலங்கல், மதிப்பிடுதல்
(5) செவிமடுத்தல், விளங்கிக்கொள்ளல், துலங்கல், மதிப்பிடுதல்

38. 'ஸ்டார்' வானொலி அலைவரிசை பெருமளவிலான கிரகிப்போர் கூட்டத்தை வெளிக்களத்தில் கொண்டுள்ளதென அறிக்கைப்படுத்தியுள்ளனர். வெகுசன ஊடக கிரகிப்போர் கூட்டத்தின் தொடர்பு பற்றி மிகச் சரியான கருத்தாக இருக்கக்கூடியது
(1) தெரிவு செய்யப்பட்ட கூட்டம் (2) கற்பனைக் கூட்டம்
(3) இனங்காணப்பட்ட கூட்டம் (4) பெருமளவு கூட்டம்
(5) வாடிக்கையாளர் கூட்டம்

39. வலுவான சமூகமொன்றில் வாண்மையாளர்களினால் உருவாக்கப்பட்ட கலாசாரமாக இருக்கக்கூடியது
(1) பல்லினமக்கள் கலாசாரம் (2) வெகுசன கலாசாரம்
(3) பண்டைய உயர் கலாசாரம் (4) பிரமுகர் கலாசாரம்
(5) இனக் கலாசாரம்

40. இந்நாட்டில் வெகுசன ஊடகமூடாக பிரபல்யமான கலாசார நிகழ்ச்சிகள் எல்லை தாண்டி கிரகிப்பவர்களிடையே செல்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. இது புதிய போக்காக இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது. இது
(1) இளைஞர்களின் விழித்தெழலாகும்.
(2) வெகுசன ஊடகத்தின் பல்வகைமையாகும்.
(3) பெறுநர்களின் உரிமையை மீறலாகும்.
(4) இடைக்கலாசாரம் பற்றிய கற்கை ஆகும்.
(5) அபிவிருத்தித் தொடர்பாடலின் பிரச்சினையாகும்.

[பக். 6 ஐப் பார்க்க

41. விரிவுரையாளர் ஒருவரால் விரிவுரையின்போது அறிகைக் கண்டுபிடித்தல் என்பது யாது என்பதை விளக்குவதற்கு முன்வைக்கப்பட்ட சில கருத்துகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றிடையே **தவறான** கருத்து
   (1) அறிகைக் கண்டுபிடித்தல் ஒரு வரலாற்றுச் சம்பவமாகும்.
   (2) அறிகைக் கண்டுபிடித்தலில் பல்வேறு நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
   (3) அறிகைக் கண்டுபிடித்தல் அதிகாரத் துறையினருக்கு ஒரு சவாலாகும்.
   (4) அறிகைக் கண்டுபிடித்தல் கொள்கையளவிலான பகுப்பாய்வின் பெறுபேறு மாத்திரமேயாகும்.
   (5) அறிகைக் கண்டுபிடித்தல் உலகின் கண்டுபிடிப்பு வெளியிடல்கள் ஆகும்.

42. உலகின் எந்த இடத்திலும் இடம்பெறும் சம்பவத்தை விவரிக்கும் ஆற்றல் மனிதனிடம் உண்டு. இதற்குக் காரணம்
   (1) தன்னிச்சையும் படைப்பாற்றலும் ஆகும்.
   (2) தன்னிச்சையும் இருமையும் ஆகும்.
   (3) தன்னிச்சையும் தூரமிகுதியான நெருங்கிய ஒப்புமையும் ஆகும்.
   (4) விசேட கவனமும் இருமையும் ஆகும்.
   (5) தூரமிகுதியான ஒப்புமையும் இருமையும் ஆகும்.

43. பூகோளமயமாக்கலுக்கு முன் நிபந்தனையாக இருக்கக்கூடியது
   (1) தொழினுட்ப முன்னேற்றத்தின் மறுத்தொழிப்பு ஆகும்.
   (2) தேசிய மற்றும் வீட்டு விழுமியங்களுக்கு முக்கியத்துவம் வழங்குதலாகும்.
   (3) இனங்களுக்கிடையிலான நெருக்கம்
   (4) நாடுகளுக்குக் குறுக்கான (transnational) நிறுவகங்களின் படைப்பாற்றலாகும்.
   (5) வெகுசன ஊடகத்தின் விரிவாக்கமாகும்.

44. ஊடக விமர்சனத்தில் மிகவும் கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்கள் சில பற்றி விரிவுரையாளர் ஒருவரால் அவரது விரிவுரையில் விளக்கப்பட்டன. அக்கலந்துரையாடலின்போது வெளியிடப்பட்ட கருத்துகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
   A - கருத்துகள் சம்பந்தமான யோசனைகள்
   B - ஒழுக்க விழுமியங்கள் இருத்தல்
   C - ஊக்கம் இருத்தல்
   D - தகவல் தொழிற்பாடு இருத்தல்
   E - பொழுதுபோக்கும் சுபாவம் இருத்தல்
   இவற்றுள் மிக உகந்த விடயங்களாக இருக்கக்கூடியது
   (1) A, B, D (2) A, B, E (3) A, C, D (4) B, C, E (5) C, D, E

45. வர்த்தக விளம்பரங்கள் பற்றிய சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.
   A - நவீன வர்த்தக விளம்பரங்களில் உற்பத்திகள் பற்றிய துறைசார் அடிப்படைத் தகவல்கள் வழங்கப்படும்.
   B - வர்த்தக விளம்பரங்கள் ஊடகப் பயன்பாட்டுச் செலவினைப் பெரும்பாலும் குறைத்தலில் தாக்கஞ் செலுத்தும்
   C - பொருள்கள் சேவைகளின் கொள்வனவில் புத்திசாதுரியமான தீர்மானம் எடுத்தலுக்கு நுகர்வோருக்கு வர்த்தக விளம்பரங்கள் உதவும்
   இவற்றுள்
   (1) A மாத்திரம் உண்மை (2) B மாத்திரம் உண்மை
   (3) C மாத்திரம் உண்மை (4) A, B ஆகியன மாத்திரம் உண்மை
   (5) A, B, C ஆகிய எல்லாம் உண்மை

46. ஊடக விமர்சனத்துக்கான சில அணுகு முறைகள் கீழே தரப்பட்டுள்ளன.
   A - அரசியல் அணுகு முறை
   B - ஒப்பீட்டு மற்றும் பகுப்பாய்வு அணுகு முறை
   C - மொழிவாரியான அணுகு முறை
   D - நல்லொழுக்க அணுகு முறை
   E - வரலாற்று ரீதியான அணுகு முறை
   பத்திரிகை நிறுவனம் ஒன்றினால் வெளியிடப்படும் தினசரிப் பத்திரிகையான சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பத்திரிகைகளில் ஒரே அரசியல் செய்தி ஒன்றுக்கொன்று வித்தியாசமாக வெளியிடப்பட்டது. இத்தகைய நிலைமையில் பகுப்பாய்வுக்கு மிக உகந்த பத்திரிகை விமர்சன அணுகுமுறைகளாக இருக்கக்கூடியன
   (1) A, B, C (2) A, B, D (3) A, C, D (4) B, C, E (5) C, D, E

47. சமூக இசைவாக்க செயன்முறையின் இனங்காணுதலுக்குத் தொடர்புள்ள சில எண்ணக்கருக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   A - போலி நடிப்பு (imitation)
   B - இனங்காணல்
   C - முரண்பாடு (conflict)
   D - பாத்திரமேற்று நடித்தல் (role playing)
   E - சமமின்மை (disparity)
   மேற்குறித்த எண்ணக்கருக்களுள் சமூக இசைவாக்கச் செயன்முறையை இனங்காணுவதற்கு வேண்டிய எண்ணக் கருக்களைத் தெரிவு செய்க
   (1) A, B, C (2) A, B, D (3) B, C, D
   (4) C, D, E (5) A, B, C, D, E ஆகிய எல்லாம்

[பக். 7 ஐப் பார்க்க

48. மக்கள் விரும்பும் பிரபல்யமான கலாசார உரையாடல் ஒன்றில் முன்வைக்கப்பட்ட சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   A - ஒவ்வொரு சமூக வகுப்பினரையும் கவரும்.
   B - பாரிய அளவிலான உற்பத்தியும் பரம்பலும் இருக்கும்.
   C - உயரளவிலான கலைத்துவப் பெறுமானம் உடையது.
   D - வணிகத் துறையுடன் தொடர்புள்ளது.
   E - தொழிலாளரிடையே விரைவாகப் பரவும்
   பிரபல்யமான கலாசாரத்துடன் மிக உகந்ததாக இருக்கக்கூடியது
   (1) A, B, C, D (2) A, B, C, E (3) A, B, D, E
   (4) B, C, D, E (5) A, B, C, D, E ஆகிய எல்லாம்

49. ஊடக விளம்பரம் என்பதன் பொருள்
   A - சமூகத் தேவைகளை நிறைவேற்றல்
   B - வர்த்தகத் தேவைகளை நிறைவேற்றல்
   C - சமூக நடத்தையை மாற்றல்
   D - பொதுமக்கள் கருத்தியல்களை மாற்றல்
   E - பண்புள்ள நேர் ஊக்கல்
   மேற்குறித்த கூற்றுகளுள்
   (1) A, B, C, D ஆகியன உண்மையானவை அதே வேளை E பொய்யானது.
   (2) A, B, C, E ஆகியன உண்மையானவை அதே வேளை D பொய்யானது.
   (3) A, B, D, E ஆகியன உண்மையானவை அதே வேளை C பொய்யானது.
   (4) A, C, D, E ஆகியன உண்மையானவை அதே வேளை B பொய்யானது.
   (5) B, C, D, E ஆகியன உண்மையானவை அதே வேளை A பொய்யானது.

50. தகவல்களை ஊடுகடத்துவதற்கான சில முறைகள் கீழே தரப்பட்டுள்ளன.
   A - தொலைபேசிச் சேவையைப் பொருத்துதல்
   B - செல்லிடத் தொலைபேசிச் சேவை
   C - சாதாரண தபால் சேவை
   D - மின்னஞ்சல் சேவை
   E - குறுஞ் செய்திச் சேவை (SMS)
   இவற்றுள் ஆளிடைத் தொடர்பாடல் அலைவழிகளில் பயன்படுத்தக்கூடியவை எவை ?
   (1) A, B மாத்திரம் (2) A, B, D மாத்திரம்
   (3) A, B, D, E மாத்திரம் (4) A, B, C, D மாத்திரம்
   (5) A, B, C, D, E ஆகிய எல்லாம்

The National e-learning Portal for General Education

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

29 T II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2010 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2010 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2010

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය II
தொடர்பாடல், ஊடகக்கற்கை II
**Communication and Media Studies II**

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

※ **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
※ ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **20** புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** வெகுசன தொடர்பாடல் ஊடகத்தினூடாகத் தகவல்களை முன்வைக்கும்போது முக்கியமாக இடம்பெறுவது நாம் பயன்படுத்தும் மொழியாகும். ஆனால் ஒவ்வொரு வெகுசன ஊடகமும் அவற்றுக்கேற்பப் பயன்படுத்தும் மொழியின் விசேட வடிவங்கள் உண்டு. அவற்றுக்கேற்ப அவ்விசேட வடிவங்களை அறிவது ஊடகங்கள் பயன்பாட்டில் முக்கியமானதாகும்.

(i) வெகுசன தொடர்பாடலின் **நான்கு** பிரதான இயல்புகளைக் குறிப்பிடுக.

(ii) வாய்மொழித் தொடர்பாடல் என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(iii) வானொலி ஊடகத்தில் மொழியைப் பயன்படுத்தும் விதங்கள் இரண்டு கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை விவரிக்க.

(அ) உரையாடல் (conversation)    (ஆ) காண்பியவாக்கம் (visualization)

(iv) பத்திரிகைகளில் செய்தியைப் பிரசுரிப்பதற்கு மொழியைப் பயன்படுத்தும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய **ஐந்து** விடயங்களைக் குறிப்பிட்டு, அவற்றின் முக்கியத்துவத்தை விளக்குக.

**2.** (i) பிரபல்யம் மிக்க கலாசாரத்தின் **நான்கு** அடிப்படை இயல்புகளைக் குறிப்பிடுக.

(ii) விளம்பரத்தின் மூலம் சமூகத்திற்குக் கிடைக்கும் **நான்கு** பயன்களைச் சுருக்கமாக விளக்குக.

(iii) மொழியைத் தொலைக்காட்சி ஊடகத்திற்குப் பயன்படுத்தும்போது கவனஞ் செலுத்த வேண்டிய **மூன்று** அடிப்படை இயல்புகளை விளக்குக.

(iv) தகவல் வழங்கும் பணியின் முக்கியத்துவம் பற்றி **நான்கு** விடயங்களை அடிப்படையாகக் கொண்டு சஞ்சிகை ஒன்றுக்கு ஒரு கட்டுரை எழுதுக.

**3.** (i) ஊடகத்திற்கும் கலாசாரத்திற்கும் இடையிலுள்ள தொடர்பைச் சுருக்கமாக அறிமுகஞ் செய்க.

(ii) ஊடகத்தினால் ஏற்படும் தீங்கு பயக்கும் தாக்கங்களை இழிவளவாக்கப் பயன்படுத்தப்படும் **இரு** பிரதான முறைகளை உதாரணங்கள் தந்து விளக்குக.

(iii) சமூகத் தொடர்பாடல் செயன்முறை வெற்றியீட்டுவதில் செல்வாக்குச் செலுத்தும் **நான்கு** திறன்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டினை** உதாரணங்களுடன் விவரிக்க.

**4.** பெறுமதிமிக்க உபகரணங்களுடன் அழிந்து கொண்டிருக்கும் அரசாங்கக் கட்டடமொன்றில் செல்லிடத் தொலைபேசி மூலம் ஒளிப்படம் எடுத்த ரவி அதை ஓர் வெகுசன ஊடக நிறுவனத்திடம் கையளித்தார். அது அன்று செய்தி ஒளிபரப்பில் பிரதான செய்தியாக அமைந்தது.

(i) ரவியின் இவ் அறிக்கையிடுதல் எவ்வாறான ஊடக போக்கு (trend) என அழைக்கப்படும்?

(ii) அத்தகைய அறிக்கையிடலின் **மூன்று** அடிப்படை இயல்புகளைக் குறிப்பிடுக.

(iii) மாற்று வெகுசன ஊடகமொன்றின் **நான்கு** இயல்புகளைக் குறிப்பிட்டு, அவற்றில் **ஒன்றைப்** பற்றிச் சுருக்கமாக விவரிக்க.

(iv) புதியதொரு ஊடகமான இணையம் தற்கால ஊடகங்களிலிருந்து வேறுபடும் **நான்கு** விதங்களை விளக்குக.

[பக். 2 ஐப் பார்க்க

5. ABC வங்கியின் நிதியின் மூலம் பாடசாலை ஒன்றின் கணினி நிலையம் தாபிக்கப்பட்டு அது ABC கணினி நிலையம் என்னும் பெயரில் திறக்கப்படுவதற்கான விழா அண்மையில் நடைபெற்றது. அது தொடர்பாகச் பத்திரிகையில் ஒரு பக்க அறிவிப்பாகப் பின்னிணைப்பு ஒன்றினை வெளியிடுவதற்கு வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

(i) பத்திரிகை அறிவித்தலுக்குப் பதிலாக ஒரு பக்கப் பின்னிணைப்பை வெளியிடுவதற்கு ABC வங்கி தீர்மானித்தல் பொதுசனத் தொடர்பு செயன்முறையின் ஓர் அடிப்படை இயல்பாகும். அப்பொதுசனத் தொடர்புச் செயன்முறையின் முக்கியத்துவத்தையும் அதனுடன் தொடர்புபட்ட **நான்கு** விடயங்களையும் குறிப்பிடுக.

(ii) திறப்புவிழா பற்றிய காட்சிகளுடன் செய்தி பிரதேச தொலைக்காட்சி நிருபரால் தமது அலைவரிசைக்கு அனுப்பிய பின்னர், அது கணினிக் கல்வி நிலையத்தின் பெயரைக் குறிப்பிடாமலும் காட்சிப்படுத்தாமலும் ஒளிபரப்பாகியது. அதில் தாக்கத்தை ஏற்படுத்தும் **இரு** விடயங்களை விளக்குக.

(iii) அச்செய்தி, ஒரு பத்திரிகையில் அபிவிருத்திக்கான சிறப்பு அம்சப் பக்கத்தில் வெளியாகியது. தெரிந்தெடுத்த ஒரு மேலைத்தேயக் கருத்தியலுக்கேற்ப அபிவிருத்திக்கும் வெகுசன ஊடகத்திற்கும் இடையே உள்ள தொடர்பை **நான்கு** அடிப்படை விடயங்களைக் கொண்டு ஆராய்க.

6. 'கமல், உங்களுடன் சேர்ந்து நாளைக்கு கதிர்காமம் வரக்கிடைக்காது. அந்தப் பயணம் போக இருக்கும் மற்ற பத்து நண்பர்களுக்கும் சொல்லி, பயணத்தை ஒரு கிழமைக்கு தள்ளிப்போட முடியாதா?' இத்தொலைபேசி அழைப்பொன்று அதிகாலையில் சுரேஷிடமிருந்து வந்தது. 'ஏன் வரமுடியாது' என்று நான் கேட்டேன். 'கமல் அவசரமாக எனக்கு கண்டிக்குப் போக வேண்டியிருக்கிறது'.

(i) இக்கலந்துரையாடலில் பயன்படுத்த **முடியாத** வாய்மொழியற்ற **நான்கு** தொடர்பாடல் முறைகளைக் குறிப்பிடுக.

(ii) பின்வரும் தொடர்பாடல் மாதிரியுருவைக் குறிப்பிட்டு, அதில் குறிப்பிடப்படும் ஆங்கில எழுத்துகளால் காட்டப்படும் அம்சங்களுக்குப் பொருத்தமானவற்றை அக்கலந்துரையாடலிருந்து காட்டுக.

S ⟶ M ⟶ C ⟶ R

(iii) ஆளிடைத் தொடர்பாடல் என்பதை அவ்வகைக்கு விசேடமாக உரிய **மூன்று** விடயங்களைக் கொண்டு சுருக்கமாக விளக்குக.

(iv) மேற்குறித்த கலந்துரையாடலில் சுரேஷ் கமலிடமிருந்து வேண்டுகோள் விடுத்தது ஒரே நேரத்தில் பூர்த்தி செய்ய முடியாத விடயத்தினை நிறைவேற்றுமாறு கேட்கும் கடினமான கோரிக்கையாகும். நீர் அத்தகைய ஓர் நிலைமையை எதிர்நோக்க வேண்டியுள்ளதெனக் கருதுக. அதன்போது நீர் பின்பற்றும் பயனுறுதிவாய்ந்த தொடர்பாடல் முறைகள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அவற்றைத் தனித்தனியாக ஆராய்க.

7. வீட்டுச் சமாதானம் தகர்வுறுதல் தொடர்பான தகவல்கள் இலங்கையின் நாளிதழ்களில் அடிக்கடி தெரிவிக்கப் படுகின்றன. இத்தகைய நிலைமையேற்படுவதற்குப் பல்வேறு காரணங்கள் தாக்கஞ் செலுத்துகின்றன.

(i) வீட்டுச் சமாதானம் தகர்வுறுவதற்கு ஏதுவான **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக.

(ii) பத்திரிகை ஊடகங்களில் வன்செயல் வெளிப்படுத்தப்படும் **மூன்று** விதங்களைச் சுருக்கமாக விளக்குக.

(iii) விமர்சனமுள்ள கிரகிப்பவராயின் (critical reciever) நீங்கள் தொலைக்காட்சியில் காணும் வன்செயலுக்கு ஏதுவான **நான்கு** பிரதான விடயங்களைக் குறிப்பிட்டு, அவற்றை உதாரணங்களுடன் விளக்குக.

* * *